**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## CC.NO. 27/2022 LW-4 PW-3

| | |
|---|---|
| Name | சங்கர் |
| Husband/Father Name | மார்கபந்து |
| Village /Area | அம்மூர் |
| Taluk | |
| Occupation | இராணுவ வீரர் (ஓய்வு) |
| Age | 54 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 16.09.2025 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**(எதிரி 1 ஆஜர். எதிரி 2,3 ஆஜரில் இல்லை. 2, 3 வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். அ.சா.1 பூமணியை எனக்கு தெரியும். எனது தெருவை சேர்ந்தவர். 2022 ம் வருடம், தேதி, மாதம் ஞாபகம் இல்லை பிற்பகல் 2.00 மணிக்கு நானும் எனது நிலத்தில் வேலை முடித்துவிட்டு அம்மூரில் சின்ன தெருவில் உள்ள எனது வீட்டிற்கு வந்த போது போலீசார் அங்கு விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். நான் விசாரித்த போது அ.சா.1 பூமியை பாண்டியன் தாக்கியதாகவும் அது தொடர்பாக விசாரணை செய்து கொண்டிப்பதாகவும் தெரிவித்தனர். என்னிடம் அதற்கு சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டதன் படி நான் கையொப்பம் செய்து கொடுத்தேன்.

தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். ( **பார்வை மகசரில் உள்ள அ.சா.3 ன் கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 பூமணி எனக்கு என்ன உறவு என்றால் உறவினர் இல்லை. எனக்கு தெரிந்தவர். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்று தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. பூமணி காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்ற சமயம் நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். இருவருக்கும் சண்டை நடந்ததாக இருந்தது. நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக கூறுவது தவறு பூமணி என்பவர் புகார் கொடுக்க காவல்நிலையம் சென்ற சமயம் நானும் உடன் சென்று கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## CC.NO. 27/2022 LW- 3 PW- 4

| | |
|---|---|
| Name | குமார் |
| Husband/Father Name | சின்கண்ணு |
| Village /Area | அம்மூர் |
| Taluk | |
| Occupation | கூலி |
| Age | 60 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 16.09.2025 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**(எதிரி 1 ஆஜர். எதிரி 2,3 ஆஜரில் இல்லை. 2, 3 வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பூமணியை எனக்கு தெரியும். எனது தெருவை சேர்ந்தவர். கடந்த 05.05.2022 அன்று மாலை 5.00 மணிக்கு அம்மூரில் உள்ள சின்னத்தெருவில் வசிக்கும் பூமணியை நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள நபர் தாக்கியதாக கேள்விப்பட்டேன். ஒரு வாரம் கழித்து அங்கு வந்த போலீசார் என்னை விசாரணை செய்து என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் போட்டுக்கொடுத்தேன்.

தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். ( **பார்வை மகசரில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 பூமணி எனக்கு என்ன உறவு என்றால் எனக்கு தெரிந்தவர். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்று தெரியுமோ என்றால் எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. பூமணி காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்ற சமயம் நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை.

**சாட்சியை அரசு தரப்பில் பகுதி பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதியும் வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பூங்கொடிக்கும், நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள நபருக்கும் தகராறு ஏற்பட்டது சம்மந்தமாக விசாரணை செய்ததாவும் அதற்கு சாட்சியாக இருக்கும் படி என்னை கேட்டுக்கொண்டதன் பேரில் அந்த விசாரணைக்கு சாட்சியாக நான் கையொப்பம் செய்து கொடுத்தேன்.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2025.09.17 13:07:06 +0530

District Munsif cum Judicial Magistrate,
Ranipet.